அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்



உள்ளே...


ஆசிரியர் தலையங்கம்......................................1

நெஞ்சமே அஞ்சாதே நீ! ,

காலம் என்பது.......................................................2

சிலப்பதிகாரம்........................................................3

மக்கள் சக்தி இயக்கம் .................................... .5

சங்க இலக்கியம்....................................................6

கவிதைகள்..............................................................7



சிந்தனை 7 செயல் 3 ஆசிரியர் மரு.த.இராசலிங்கம். சனவரி 2025

***பண்புள்ள தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!***

## *புனித நடைப்பயணம்...செருப்பணிந்து நடப்பது குற்றமா ?*

“சாமி குத்தம்” (குற்றம்), “சாமி கண்ண குத்திடும்” என்றெல்லாம் சிறுபிள்ளைகளிடம் அவர்கள் தவறு செய்யாமல் ஒரு கட்டுப்பாட்டுடன் இருப்பதற்காகப் பெரியவர்கள் சொல்வதுண்டு. ஆனால் கோவில்களுக்கு புனித நடைப்பயணம் செல்பவர்கள் காலில் செருப்பணிந்து நடந்து சென்றால் அது சாமி குற்றமா? என்பது விளங்கவில்லை. முன்பு போக்குவரத்து வசதி இல்லாத காலத்தில் மனிதர்கள் எல்லா இடங்களுக்கும் கால்நடையாகவே சென்றார்கள். அதன்பிறகு மாட்டுவண்டியில் சென்றார்கள். இப்பொழுது நிலைமை அப்படியில்லை. பெரும்பாலான ஊர்களுக்கு எந்த நேரத்திலும் செல்லக்கூடிய அளவுக்கு போக்குவரத்து வசதி உள்ளது. மேலும் திருவிழாக் காலத்தில் அரசு சிறப்பு பேருந்தும் இயக்குகிறது. இருந்தும் பக்தர்கள் தனியாகவோ, குடும்பமாகவோ, குழுக்களாகவோ கோவில்களுக்கு நடந்து செல்கிறார்கள். நடப்பது என்பது நல்லதுதான். குழுவாக நடந்து செல்வது என்பது மகிழ்ச்சியான அனுபவம்தான் ஆனால் காலில் செருப்பு அணியாமல் நடந்து செல்வதுதான் பக்தியின் அடையாளமா ?.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், செருப்பு இல்லாமல் நீண்ட தூரம் நடந்து சென்றுவிட்டு கால் பாதங்கள் பொத்து புண்ணாகி பலர் மருத்துவமனைக்கு வருகின்றார்கள். அவர்களில் ஓர் இளைஞர், இரண்டு பாதங்களும் மிகவும் மோசமாக ஆழமாக புண்கள் ஏற்பட்டு, தாங்க முடியாத வேதனையுடன் வந்தார். புண்கள் குணமாகி அவர் வேலைக்குச் செல்ல எப்படியும் ஒரு மாதம் ஆகும். மன உளைச்சலுடன் பொருளாதார இழப்பு !. கோவிலுக்கு நடந்து செல்லுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை, ஆனால் செருப்பு அணியாமல் வந்தால்தான் கருணை காட்டுவேன் என்று எந்தக் கடவுளாவது சொல்வதுண்டா ? செருப்பு அணிந்து நடப்பது தெய்வக் குற்றமா ?

காலில் எதற்காக செருப்பு அணிகிறோம் ? அழகுக்கா ? ஆடம்பரத்துக்கா ? கல், முள் குத்தாமல் பாதங்களைப் பாதுகாப்பதற்கும், கரடு முரடான பாதையில் பாதிப்பின்றி நடப்பதற்கும், நுண்ணுயிரிகளால் தொற்று ஏற்படாமல் தடுப்பதற்கும் அணிகிறோம். ஆதி மனிதன் இலை, தழைகளாலும், மரப்பட்டையாலும் ஆடை அணியக் கற்றுக் கொண்ட பிறகு, அவன் காட்டில் உள்ள பொருள்களைக் கொண்டு செருப்பு செய்து போட்டுக் கொண்டதுதான் இரண்டாவது நாகரிக வளர்ச்சி. சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு வரை கிராமங்களில் பனை ஓலையிலும், பனை மட்டையிலும் மக்கள் செருப்பு செய்து போட்டுக் கொண்டதைப் பார்த்திருப்பீர்கள்.

இவ்வாறு நம்மை ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு நடத்திச் செல்லும் கால்களைப் பாதுகாக்கும் செருப்பை, அதன் மேன்மையை உணராமல், அதை அணிந்து கொண்டு கோவிலுக்கு நடந்து செல்வது, பக்திக்கு எதிரானது, என்று நீங்கள் கருதினால் அதை அந்தக் கடவுளே ஏற்றுக் கொள்ளமாட்டார். உடல் வருந்தக் கோவிலுக்குச் செல்வதை விட, உள்ளம் தூய்மை பெறச் செல்வதே விரும்பத்தக்கது. .....அன்புடன் ஆசிரியர்



# நெஞ்சமே அஞ்சாதே நீ!

மக்கள் சக்தி இயக்க

நிறுவநர்

சிந்தனையாளர்

பிறர் ஆமோதிப்பை நம்பி வாழ்வது- எதர்நோக்கி நிற்பது- தனிமனித வாழ்வில் மட்டுமல்ல, பெரிய பெரிய அரசியல் தலைவர்கள் வாழ்விலும் இது சரிவைத் தந்திருக்கிறது. மனிதர்களும் தலைவர்களும் பிறர் ஆமோதிப்பதை எதிர்பார்க்கிறார்கள் என்பதை உணர்ந்த ஒரு காக்காய் கூட்டம், தலைவன் எது செய்தாலும், சரி என்று தலையாட்டுகிறது. இத்தகைய ஒரு கும்பலை வளர்த்துக் கொண்டதன் மூலம், நாட்டின் உண்மை நிலை அறிய முடியாமல் போய், தோல்வியடைய நேரிடகிறது. பிறர் ஆமோதிப்பை எதிர்பார்ப்பவர்கள், பிறருக்கு என்ன சொன்னால் இனிக்கும் என்று யோசிக்கிறார்களே தவிர அவர்களுக்கென்று ஒரு கொள்கை ஏதும் கிடையாது. நம்மைப்பற்றி நாமே ஓர் எடை போட்டு வைத்துக் கொண்டிருக்கும்போது பிறரது அபிப்பிராயம் நம்மிடம் ஒரு சலனத்தையும் ஏற்படுத்தாது. பிறர் என்ன சொல்வார்களோ எனப் பயப்படும்போது நமது தனித்தன்மையை, சுயமதிப்பை அடகு வைக்கிறோம். “பிறர் என்ன சொல்வார்களோ” என்ற பயம்தான் எல்லோரையும் முடக்கி வைக்கிறது.... நன்றி கங்கை நிலையம்.



டாக்டர்.எம்.எஸ்.உதயமூர்த்தி

## காலம் என்பது ....

## முனைவர்.லெ.பாஸ்கர்

ஒரு மனிதனின் பிறப்பு முதற்கொண்டு இறப்பு வரை “காலம்” அதாவது நேரம் என்பது ஒரு முக்கியக் காரணியாக இருக்கிறது. “நேரம் சரியில்லை” என்பதும் மனிதனின் இறப்பை “காலமாகிவிட்டார்” என்று கூறுவதும் “காலத்தே பயிர் செய்” என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. நம் வாழ்க்கையில் காலம்தான் எல்லாவற்றிற்கும் விடை சொல்கிறது. காலம் தவறாமை என்பது முக்கியமான மனித ஒழுக்கமாகும். நாம் திட்டமிடுவதில் வல்லவர்கள், ஆனால் குறித்த காலத்தில் எதையும் செய்யும் பழக்கம் இல்லாதவர்கள், செயலை ஒத்திப்போடுவது என்பது நம் வழக்கமாகிவிட்டது. செய்வன திருந்த செய் ! வருந்த செய்யாதே ! என்பதும் காலத்தில் செய் என்று உணர்த்தும் பாடமே !. செய்கின்ற உதவி கூட, காலத்தால் செய்யும் போதுதான் அதற்குரிய நன்மையைத் தருகிறது. அதை உயர்ந்தவர்களுக்குச் செய்வதைவிட, பிறரை உயர்த்துவதற்காகச் செய்ய வேண்டும். அந்த உதவி எந்தக் காலத்திலும் நினைவு கொள்ளப்படும். காலம் பொன் போன்றது என்ற பழமொழி, காலத்தின் அருமையை விளங்கச் செய்வதாகும். காலத்தால் நற் செயல்களைச் செய்யும்போது, அது நம்மையும் உயர்த்தி, நம்மைச் சார்ந்தவர் களையும், இந்தச் சமுதாயத்தையும் உயர்த்தும். காலமே நல்ல முதலீடு ! அதை உள்ளத்தில் பயிரிடு !



**மதுரைக் காண்டம். வாழ்வில் மீண்டும் மலர்ச்சியைக் காண, மதுரை மாநகருக்குச் சென்ற கோவலன்–கண்ணகியரின் முடிவும், மதுரையின் அழிவும்.**

சென்ற இதழ் தொடர்ச்சி....

### 242. ஆயர்பாடியில் தீய நிமித்தம் தோன்றல்

மண்கலத்தில் உறையிட்ட பாலும் ஏனோ
மணம்கமழும் தயிராக உறைய வில்லை!
வெண்ணெய்யும் உறியிலிருந் தெடுத்து ருக்க
வெஞ்சூட்டில் நெய்யாக உருக வில்லை.!
கண்களிலே நீர்சோர காளைகள் அங்கே
கதறியதால் தண்ணீரும் பருக வில்லை!
தூண்களிலே கட்டாத ஆட்டுக் குட்டி
துள்ளியெங்கும் விளையாடப் போக வில்லை!

### 243. ஆய்ச்சியர் குரவை

ஆயர்பா டியில்தீதாய் நிமித்தம் தோன்ற
அங்குள்ள பெண்டிரெல்லாம் அச்ச முற்று
தாயெனவே விளங்குகின்ற மாதரி கண்டு
தவிப்புடனே தம்நிலைமை சொல்லி நிற்க
தேயமதில் நடப்பதையே காணும் போது
திகைக்கின்றேன் என்றவாறு மாதரி தாயும்
மாயவனாம் கண்ணனையே வேண்டி நாமும்
மனமுருகி குரவைக்கூத் தாடுவோ மென்றாள்.

குலதெய்வம் கண்ணனையே தொழுது வேண்டி
குரவைக்கூத் தாடியபின் ஆயர் பெண்கள்
பலகாலம் நீராடும் வைகைக் கரைக்கு
ஐயையோடு மாதரியும் சூழ சென்றார்.
விலகிடுமா தீநிமித்தம் என்ற எண்ணம்
விடியலில்லா இரவுபோல நெஞ்சைக் கவ்வ,
உலவிவந்த கோவலனின் கொலையின் செய்தி
உலைக்களத்து சுடுநெருப்பாய் எரிக்க நின்றார்.

### 244. மாதரி துயருற்று புலம்பல்

அடைக்கலமாய் வந்தவனை அய்யோ !
அநியாய மாய்இழந் தேனே !
நடைபெற்ற வினையது என்ன ?
நானறிய வழியது என்ன ?
மடைதிறந்த நீரென கண்ணீர்
மாதரியின் கண்களில் பாய
உடைந்ததுவே உள்ளமே நூறாய் !
ஓடினாளே கரையிலா ஆறாய் !

ஓடியவள் ஒருகணம் நின்றாள்.
உயிர்போலும் கண்ணகி கண்டு
கூடிநின்று ஊரது பேசும்
குற்றமதை எங்ஙனம் சொல்வேன் ?
வாடியவள் வதங்கியே வீழும்
வன்கொடுமை எங்ஙனம் காண்பேன் ?
தேடிவந்த செல்வமே தொலைத்தேன் !
திக்கற்று மாதரி நின்றாள்.

மரு. த.இராசலிங்கம். படைப்பு

## 245. கண்ணகியின் துடிதுடிப்பு

எற்பாடு பொழுதினில் வானம்
எடுத்தங்கே செந்நிற ஆடை
மேற்திசையில் உடுத்திடும் வண்ணம்
மெதுவாக பரிதியும் மறைய
பொற்கொடியாள் கண்ணகி நெஞ்சில்
புரியாத கலக்கமே தோன்ற
நிற்கின்ற இடமதில் ஏனோ
நிலைகொள்ளா மல்தவித் தாளே !

ஊருக்குள் சென்றவர் தோழி !
உறைவிடமோ திரும்பிட வில்லை.
வேருக்குள் ஊற்றிய வெந்நீர்
வெந்துமனம் நோகுது தோழி !
தாருக்குள் கசங்கிய பூவாய்
தலைவன்வரக் காண்கிலேன் தோழி !
யாருக்கும் என்னவர் நிலையும்
யானறிய காண்கிலேன் தோழி !

நெஞ்சம்தான் துடிக்குது தோழி !
நீடிக்கும் காலமே தோழி,
வஞ்சனைகள் நடந்ததோ வென்றே
வாடத்தான் வைக்குதே தோழி !
அஞ்சியவள் கண்ணகி யாளும்
ஆயர்குல தோழியை அணைத்து
சஞ்சலம்தான் மேலிட தோளில்
சாய்ந்தபடி அரற்றி னாளே !

## 246. ஆயர்பெண் கொணர்ந்த துன்பச் செய்தி

கொலையுண்டான் கோவலன் என்ற
கொடுஞ்செய்தி உண்மையே என்று
தலைநகரில் அறிந்திட, ஆயர்
தான்வாழும் உறைவிட பெண்ணாள்
அலைபாயும் நெஞ்சது விம்ம
ஆர்ப்பரித்து விரைந்தவள் வந்து
சிலையெனவே கண்ணகி முன்னே
சிதையிட்ட சருகென நின்றாள் !

பட்டத்து தேவியின் சிலம்பை
பகற்கொள்ளை கொண்டவன் என்று
சட்டென்று மன்னவன் நீதி
சாய்ந்தொருபால் வழங்கிய தாலே
வெட்டுண்டு உன்கண வன்தான்
இன்னுயிரும் துறந்தா னம்மா !
சொட்டுசொட்டாய் கண்களும் கண்ணீர்
சொரிந்திடவே சொல்லியே நின்றாள்.

...............................................தொடரும்

# மக்கள் சக்தி இயக்கம்

## சமத்துவப் பொங்கல் மற்றும் திருவள்ளுவர் திருநாள்






பெரம்பலூர் மாவட்ம் சார்பாக ரஞ்சன்குடி கோட்டை பகுதியில் சமத்துவப் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. மாநில, மாவட்ட நிருவாகிகள், பொதுமக்கள் திரளாகப் பங்கேற்றனர்.





# சங்க இலக்கியத்தில் உவமையழகு

## கலித்தொகை -- பாலைக்கலி

தலைவியைப் பிரிந்து தலைவன் செல்வதனால், அவள் எவ்வாறெல்லாம் கலங்கி வருந்துவாள் என்பதை உவமையழகுடன் ஓர் ஓவியம் போல் தீட்டிக் காட்டியப் புலவர், தலைவனின் எண்ணத்தை மாற்றும் பொருட்டு அவன் செல்லவிருக்கும் காட்டு வழியின் இடர்பாடுகளையெல்லாம் தோழி எடுத்துரைப்பதாக நம் உள்ளம் கொள்ளை கொள்ளுமாறு உவமை நயம் விளங்க காட்டுகிறார். அதாவது, காட்டில் உள்ள அழகிய யானைகள், ஈரப்பசையற்ற நிலத்திலே உழுங் கலப்பையைப் போலத் தம் கொம்புகளைத் தரையில் ஊன்றியவாறு, துதிக்கைகளை உயரே உயர்த்தியவாறு, சோர்ந்து கிடக்குமாம். அப்படிப்பட்ட வறண்ட காடு என்பதை,

**உறல் ஊறு கமழ் கடாத்து ஒல்கிய எழில் வேழம்**

**வறன் உழு நாஞ்சில் போல், மருப்பு ஊன்றி நிலம் சேர**,......என்று பாடுகிறார்.

அத்துடன் புலவர் மனம் அமைதியுறவில்லை. காட்டுவழியின் கொடுமையை எப்படியெல்லாம் உவமையழகுடன் ஒப்பிட்டுக் கூறுகிறார் பாருங்கள்.

இளமைப் பருவத்தின் ஏழ்மை மிகமிகக் கொடியது. அதுபோல் கனி தரக்கூடிய பருவத்தில் மரங்கள் வாடிக்கிடக்கும் நிலையுடைய காடு, சிறுமை குணம் உடையவனிடம் சேர்ந்த செல்வம், யாருக்கும் பயன்படாது. அதுபோல் மரங்கள் எல்லாம் தழையற்ற மொட்டை மரங்களாக நிழல் இன்றி காட்சித் தரும். யாருக்கும் நல்லது செய்யாமல் கெட்டவன் என்ற பெயருடனே வாழ்ந்தவன் போல், வேரோடு மரம் வெம்பிக் கிடக்கும். குடிமக்கள் அல்லல் பட்டுக் கதறுமாறு அவர்களுடைய பொருள்களைக் கவர்ந்து கொள்ளும் அரசனின் ஆட்சி போல் பாழ்பட்டுக் கிடக்கும் மரங்களைக் கொண்ட காடு என்கிறார்,

**வறியவன் இளமை போல், வாடிய சினையவாய்,**

**சிறியவன் செல்வம் போல், சேர்ந்தார்க்கு நிழல் இன்றி,**

**யார்கண்ணும் இகந்து செய்து இசை கெட்டான் இறுதி போல்,**

**வேரோடு மரம் வெம்ப, விரி கதிர் தெறுதலின்,**

**அலவுற்றுக் குடி கூவ, ஆறு இன்றிப் பொருள் வெஃகி,**

**கொலை அஞ்சா வினைவரால், கோல் கோடியவன் நிழல்**

**உலகு போல், உலறிய உயர் மர வெஞ் சுரம்.** .......பாடலில் சமூக அக்கறையைக் காண்க!

.................. உவமையழகு தொடரும்

மரு.த.இராசலிங்கம்

## வெளிச்சம் தெரியும் ....

புற்றுகளால்
வளர்ந்தது மண்...
தரைமட்டமாய்
இடித்துவிடு !
வளையாமல்
கம்பிகள்...
நெருப்பிலிட்டு
வளைத்துவிடு !
முகமூடி
கிழிந்தவைகள்...
மழையில்
கோழிக்குஞ்சுகள் !
விரக்தியை
விட்டுத்தள்ளு...
உறங்கா
விழிகளுக்கு...
விடியல்
அருகில் !
திரைகளை
விலக்கியவனுக்கு...
வெல்லும்
வழி புரியும் !
வெளிச்சம்
தெரியும் !

கவிஞர். கலியுகன் கோபி
சென்னை

## தொன்மை மீட்போம்....

அடிமைகளாய்
அன்றிருந்தோம்
ஆங்கிலேயர்
ஆட்சியிலே
குடியரசாய்
ஆனபின்னும்
கோமாளிக்
கூட்டமிங்கே
குடிகெடுக்கும்
கோட்பாட்டை
கொள்முதலாய்
கொள்கின்றார்
வடிகாலும்
வாய்க்காலும்
வற்றாத
ஓடைகளும்
அடுக்குமாடி
மாளிகையாய்
ஆலைகளாய்
கோலமெய்தி
கெடுப்பதனால்
வேளாண்மை
கெட்டழியும்
பூமியின்றே...
தொடுத்திடுவோம்
போர்க்கணைகள்
தொன்மையினை
மீட்பதற்கே !

பாவலர்.சு.சண்முகசுந்தரம்
புதுச்சேரி